IW

அடையாள இலக்கம்

| B | | | | |
|---|---|---|---|---|

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2025

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

## மத்திய பிரிவு

## IW

(8 – 9 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**(அ) பொருத்தமான ஒரு எழுத்தைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.**

| | |
|---|---|
| 1. வ______ க்கம் | 6. வாழைப்ப______ ம் |
| 2. சிவ______ பு | 7. முக்கோண______ |
| 3. ச ______ க்கிழமை | 8. த______ணீர் |
| 4. ஐ ______ பசி | 9. புத்த______ம் |
| 5. ஒன்______ து | 10. சூரி______ ன் |

(10 புள்ளிகள்)

**(ஆ) கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, கோடிட்ட இடத்தில் எழுதி, வசனத்தைப் பூர்த்தி செய்க.**

1. வாணி ________________________ பள்ளிக்குச் சென்றாள்.

   அ) அம்மாவுடன் ஆ) அம்மாவுக்கு

   இ) அம்மாவை ஈ) அம்மா

2. என் ______________________ ஒரு பூனை இருக்கின்றது.

   அ) நண்பன் ஆ) நண்பனை

   இ) நண்பனது ஈ) நண்பனிடம்

3. என் ______________________ மாம்பழம் என்றால் மிகவும் விருப்பம்.

   அ) அக்கா ஆ) அக்காவுக்கு

   இ) அக்காவோடு ஈ) அக்காவுடன்

4. நல்ல ________________________ ஆசிரியர் பாராட்டினார்.

   அ) பிள்ளைகளை ஆ) பிள்ளைகளுக்கு

   இ) பிள்ளைகளின் ஈ) பிள்ளைகளே!

5. மீன் ______________________ வாழ்கிறது.

   அ) தண்ணீர் ஆ) தண்ணீரில்

   இ) தண்ணீருக்கு ஈ) தண்ணீரை

(15 புள்ளிகள்)

**(இ) கீழே தரப்பட்ட ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச் சொற்களை எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பறவை | ______________ | 6. | மாணவன் | ______________ |
| 2. | புத்தகம் | ______________ | 7. | பல் | ______________ |
| 3. | வீடு | ______________ | 8. | பசு | ______________ |
| 4. | அவன் | ______________ | 9. | அது | ______________ |
| 5. | நான் | ______________ | 10. | சிறுவன் | ______________ |

(10 புள்ளிகள்)

**(ஈ) கீழே தரப்பட்ட வாக்கியத்திலே கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன் கீழே கோடிடுக.**

1. என் **அம்மா** அன்பானவர்.

   அ) தந்தை ஆ) அன்னை

   இ) பாட்டி ஈ) மாமி

2. என் **நண்பன்** எனக்கு உதவி செய்தான்.

   அ) அண்ணன் ஆ) சிநேகிதன்

   இ) தாத்தா ஈ) உறவினர்

3. சூரியனது **ஒளி** மரங்கள் வளர உதவுகிறது.

   அ) வெளிச்சம் ஆ) நிலா

   இ) மண் ஈ) தண்ணீர்

4. மலர்கள் **மணம்** உடையவை.

   அ) நிறம் ஆ) அழகு

   இ) வாசனை ஈ) கவர்ச்சி

5. காட்டில் பல கொடிய **விலங்குகள்** வாழ்கின்றன.

   அ) மிருகங்கள் ஆ) பறவைகள்

   இ) பாம்புகள் ஈ) பூச்சிகள்

(10 புள்ளிகள்)

**(உ) மிகப் பொருத்தமான பதிலை, <u>காலத்திற்கு</u> ஏற்றவாறு, தெரிவுசெய்து எழுதுக.**

1. நான் நேற்றுப் பூப்பந்து ______________________________.

   அ) விளையாடினேன் ஆ) விளையாடுவேன்

   இ) விளையாடுகிறேன்

2. ஆசிரியர் நாளை வீட்டுப்பாடத்தைத் ______________________________.

   அ) திருத்தினார் ஆ) திருத்துகிறார்

   இ) திருத்துவார்

3. அம்மாவும் நானும் நேற்று இரவு புத்தகம் ______________________________.

   அ) வாசிக்கிறோம் ஆ) வாசித்தோம்

   இ) வாசிப்போம்

4. மாணவர்கள் சென்ற வருடம் கல்விச்சுற்றுலா ______________________________.

   அ) சென்றார்கள் ஆ) செல்கின்றார்கள்

   இ) செல்வார்கள்

5. மாணவர்கள் இப்பொழுது தேர்வை ______________________________.

   அ) எழுதுகிறார்கள் ஆ) எழுதினார்கள்

   இ) எழுதுவார்கள்

(15 புள்ளிகள்)

**(ஊ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தெரிந்தெடுத்துக் கோடிட்ட இடத்தை நிரப்புக.**

| | | | |
|---|---|---|---|
| மிருகங்களை | உணவு | காட்டரசன் | வலிமையாலும் |
| மோப்பம் | குட்டியை | காடுகளில் | முழங்கும் |
| கொன்று | குகைக்குள் | | |

சிங்கத்தை மிருகக்காட்சி சாலைகளில் பார்த்திருப்பீர்கள். விலங்குகளுள் தோற்றத்தாலும் (1)________________________ வீரநடையினாலும் சிறப்பாக மதிப்பிடப்படுவது சிங்கம். அதனால்தான் சிங்கம் (2)______________________ என்று அழைக்கப்படுகிறது.

சிங்கம் ஆபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் அடர்த்தியான (3)________________________ வாழ்கிறது. அது இருக்கும் இடத்தை எளிதில் கண்டுபிடிக்கமுடியாது. சிங்கம் (4)___________________________ பிடிக்கும் இயல்புடையது. பகலில் (5)________________________ தேடியும், நீர் அருந்தவும் வரும் (6) ________________________ கொல்லும்.

சிங்கம் பசி எடுத்தால் (7) ______________________, அப்போது அஞ்சி வாழும் உயிரினங்கள் எல்லாம் அங்கும் இங்கும் ஓடும். அவ்வாறு ஓடும் விலங்குகளில் ஒன்றைக் (8)___________________________ தின்னும். பெரிய விலங்காயின் (9)________________________ இழுத்துச் சென்று தின்னும்.

ஆண்சிங்கம் தன் துணையுடன் சேர்ந்து வாழும். பெண்சிங்கம் பெரும்பாலும் ஒரு குட்டி ஈனும். ஆண்சிங்கம் வேட்டையாடி உணவு கொண்டுவரும். பெண்சிங்கம் (10)________________________ காக்கும். சிங்கம் கொடிய விலங்கு என்றாலும் அக்காலத்தில் அரசர்கள் சிங்கங்களைப் போற்றிப் பாதுகாத்து வந்தனர்.

(20 புள்ளிகள்)

**(எ) கீழேயுள்ள படத்தைக் கவனமாகப் பார்த்து, கருத்தை விளங்கி, கீழே கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி, பத்து (10) வசனங்கள் எழுதுக.**

**குறிப்பு** : மிகக் குறைந்தது **4 சொற்கள்** கொண்ட வசனமாக இருக்கவேண்டும்.



| | | | |
|---|---|---|---|
| மரங்கள் | பறவைகள் | கல்லெறிகிறான் | மிதிவண்டி |
| மெதுவோட்டம் | செய்தித்தாள் | பால் | சிறுவர்கள் |
| பூக்கள் | நீரூற்று | இருவர் | பேசுகிறார்கள் |
| உடற்பயிற்சி | இருக்கை | நடைபாதை | தாய் |

1.

2.

3.

4.

5.

6.

7.

8.

9.

10.

(20 புள்ளிகள்)